## NEWS CLIPPING

Headline: **GAB releases fish into Sungai Way**

Publication : **Makkal Osai, Malaysia**

Section : **General News**

Page : **11**

Date : **14 April 2012**

# உலகத் தண்ணீர் தினத்தைக் கொண்டாடியது

## கேப் அறநிறுவனம்





பெட்டாலிங் ஜெயா, ஏப். 14— தூய்மைக்கேடுகள் அகற்றப்பட்டு சுத்தமான நீரோடும் சுங்கைவே ஆற்றில் மூன்று வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த மீன்களை விட்டு உலகத் தண்ணீர் தினத்தை அண்மையில் கொண்டாடியது கின்னஸ் எங்கர் பெர்ஹாட்டின் ( கேப் ) அறநிறுவனமான கேப் ஃபவுண்டேஷன்.

ஆறுகளைத் தூய்மைப்படுத்தும் கேப் அறநிறுவனத்தின் முயற்சியில் இது மற்றொரு மைல்கல்லாக விளங்குகிறது.

சுங்கைவே ஆறு நீர்வாழ் உயிரினங்கள் வாழ முடியாத அளவுக்கு குப்பைக்கூளத்தினாலும் இதர கழிவுப்பொருட்களினாலும் தூய்மைக்கேட்டுடன் காட்சியளித்தது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக, கேப் அறநிறுவனம் தனது 'வாட்டர்' புனரமைப்புத் திட்டத்தின் வாயிலாக, குளோபல் என்வைரன்மண்ட் சென்டர் எனும் அரசு சார்பற்ற அமைப்பு, சமூகம், அரசு சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு சுங்கைவே ஆற்றின் நீரைத் தூய்மைப்படுத்தும் பணியை மேற்கொண்டு வந்தது. இதன் விளைவாக, மோசமான நிலையில் இருந்த அந்த ஆற்றின் நீர், உயிரினங்கள் வாழும் தகுதிகொண்ட நீராக மேம்பாடு கண்டுள்ளது.

அண்மையில் நடந்த உலகத் தண்ணீர் தினத்தை முன்னிட்டு கேப் அறநிறுவனத்தின் அறங்காவலரும் கேப் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான சார்லஸ் அயர்லேண்ட், மூன்று வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த முப்பது மீன்களை அந்த ஆற்றில் விட்டார். அந்நிறுவனத்தின் தொழிலாளர்களும் இதில் திரளாக கலந்து கொண்டனர். கேப் அறநிறுவனம் தனது வாட்டர் திட்டத்தின்கீழ், பெட்டாலிங் ஜெயா, தாமான் டேசா ரியாவில் தண்ணீர் சேமிப்பு, தண்ணீரின் தூய்மையைப் பேணுதல் ஆகியவற்றை மையமாக வைத்து கதைச் சொல்லும் போட்டி, கண்காட்சி, பயிலரங்கு போன்றவையும் நடத்தப்பட்டன.